நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண் : **CC 96-2015**

வழக்கு சாட்சி : PW 11

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : காமாட்சி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : ரவிச்சந்திரன் | தொழில் | : | |
| கிராமம் | : சீர்காழி | சமயம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | 61 / 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **22.05.2026**

(1,2 மற்றும் 5 எதிரிகள் ஆஜர்இல்லை. 1,2 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

மேற்படி வழக்குவிசாரணையில் வழக்கின் வாதி திரு. நடராஜன் என்பவர் வேதாரண்யம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர் அவர்களிடம் குற்ற நடைமுறை சட்டப்பிரிவு 164ன் படி 29.08.2013ம் தேதியன்று அளித்த வாக்குமூலம் நீதித்துறை நடுவர் எண்1 நாகப்பட்டினம் அவர்களால் சான்றழிக்கப்பட்ட நகல் ஆவணம் என்னால் பெறப்பட்டது. **மேற்படி ஆவணம் அ.சா.ஆ.17 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. (எதிரி வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வாக்குமூலம் அளிப்பதற்கு நீங்கள் தானே நடராஜனுக்கு சம்மன் சார்வு செய்து அழைத்து சென்றீர்கள் என்று சொன்னால் சரிதான். நடராஜனின் மகன் தர்மராஜன் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். நீங்கள் நடராஜன் நிர்பந்தம் செய்து சொல்லிக்கொடுத்து வாக்குமூலம் அளிக்க சொன்னீர்கள் என்று சொன்னால்

சரியல்ல. நடராஜன் அளித்த அசல் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எதாவது நடவடிக்கை செய்தீர்களா என்றால் அந்த அசல் வாக்குமூலத்தை நீதிமன்றத்தால் நிதீமன்றத்திற்கு அனுப்பபட்டிருக்கும் என்று சாட்சி கூறுகிறார். நீதிமன்றம் வாக்குமுலத்தில் கையொப்பம் செய்யப்பட்ட நடராஜன் கையொப்பத்தையும் புகாரில் உள்ள நடராஜன் கையொப்பத்தையும் ஒப்பீடு செய்வதற்கு எதாவது நடவடிக்கை எடுத்தீர்கள் ஆவணங்கள் நீதிமன்றத்திற்கு சென்றுவிடும் அதனால் நடவடிக்கை எடுக்க தேவையில்லை. அசல் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்தால் அவ்வாணத்தில் உள்ள நடராஜன் கையொப்பம் அவருடையது இல்லை என நிரூபணம் ஆகிவிடும் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு அவ்வாக்குமூலம் இல்லை நீதிமன்றத்திற்கு சென்று விடும் என சாட்சி கூறுகிறார்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.05.22 15:25:07 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

நாகப்பட்டினம்.